# Food Habits in the Worship of Gods by the Sangam People

**Dr. G. Sujatha**
*Associate Professor & Head, Department of Tamil*
*DKM College for Women (Self Finance), Vellore*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18981326

**Abstract**

*There are three essential needs for a human being. They are food, clothing, and shelter. Among these, all the food items required for survival are gifts given by nature. Just as 'a man without clothes is half a man', it can be said that 'a man without food is also a lifeless man'. Therefore, rather than those who earn money for a luxurious life, there are more people who believe that this income and birth exist only to seek and eat good food. Everyone follows food patterns according to their lifestyle. In that way, the purpose of this research article is to examine the foods created for worship by the people of the Sangam period.*

***Keywords:*** *Food, Primary Food, Supplementary Food, Devotion, Ritual, Kotravai, Nadukal*

**References**

1. Chidambaranar. Sami., Ettuthogai and Tamil Culture, Arivu Publications, Chennai. 2003.
2. Surathambal. C., Classical Literature, Ainthinai Publications, Chennai. 1988.
3. S. Namasivayam, Tamil Food, International Institute of Tamil Studies, Adaiyar, Chennai – 600 020.

# சங்ககால மக்களின் தெய்வ வழிபாட்டில் உணவு முறைகள்

*முனைவர் ஞா. சுஜாதா*
இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை
த.கி.மு. மகளிர் கல்லூரி (தன்னாட்சி), வேலூர்

***ஆய்வுச் சுருக்கம்***

*ஒரு மனிதனுக்கு அத்தியாவசிய தேவையானவை மூன்று பொருட்கள். அவை உணவு, உடை, இருப்பிடம் ஆகும். இவற்றுள் உயிர் வாழ்வதற்குத் தேவையான அனைத்து உணவுப்பொருட்களும் இயற்கை தருகின்ற நன்கொடையாகும். "ஆடையில்லாத மனித அரை மனிதன்" என்பதைப்போல "உணவு இல்லாத மனிதனும் உயிரற்ற மனிதன்" எனலாம். எனவே, ஆடம்பர வாழ்க்கைக்காக பணம் சம்பாதிக்கிறவர்களைப் பார்க்கிலும், நல்ல உணவுகளைத் தேடித்தேடி உண்ண வேண்டும் என்பதற்காகத்தான் இச்சம்பாத்தியமும் பிறவியும் உள்ளன என்பவர்களே அதிகம். ஒவ்வொருவரும் அவரவர்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப உணவு முறைகளைப் பின்பற்றுவர். அந்த வகையில் சங்ககால மக்கள் இறை வழிபாடுகளுக்கு படைக்கப்பட்ட உணவுகளைக் குறித்து ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.*

***திறவுச்சொற்கள்:*** *உணவு – முதன்மை உணவு – துணைமை உணவு – வழிபாடு – வெறியாட்டு – கொற்றவை – நடுகல் வழிபாடு*

**உணவு - சொல் விளக்கம்**

பசி, உணவு என்ற இவ்விரண்டையும் முக்கியமானவைகளாகக் கொண்டு, பல காலமாகச் சமுதாயம் பல போராட்டங்களைச் சந்தித்து வந்திருக்கிறது; வருகிறது. அறிவு வளர்ச்சி மற்றும் சுவைக்கேற்ப சமைத்துண்ட காலமே, மனிதனின் உணவு பற்றிய அறிவு வளரத் தொடங்கிய காலமாகும். மனிதன் தோன்றிய காலத்திலிருந்து அவனோடு இணைந்துத் தோன்றி "தானின்றி அவனில்லை" என்ற அளவுக்கு இன்றியமையாதப் பொருளாக உணவு விளங்குகிறது என்பதை நாம் பல நிலைகளில் உணரலாம். இந்நிலையில் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவையும் தமிழர் பல பெயரிட்டு அழைத்து வந்துள்ளனர். இதனை,

> **உணாவே வல்சி யுண்டி யோதன**
> **மசனம் பதமே யிரையா கார**
> **முறையே யூட்ட முணவெனலாகும்**
> ***(பிங்கல நிகண்டு, நூற்.1153)***

என உணா, வல்சி, உணவு, ஓதனம், அசனம், பதம், இரை, ஆகாரம், உறை, ஊட்டம் என்பனவற்றை உணவின் பெயர்களாகப் பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. இவை இலக்கியங்களில் உணவின் மறு பெயராக வழங்கப்படுகிறது.

**உணவும் தமிழரும்**

தமிழிலக்கியங்கள் உணவின் தேவையை எடுத்து விளக்குவதோடு, அந்த உணவை மற்றவர்களுக்கும் கொடுத்து வாழ்வது இன்றியமையாத செயல் என்று பாடல்களின் வழி சொல்லி நிற்கின்றன. நாகரிகத்திலும் பண்பாட்டிலும் உலகிற்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய, விளங்குகின்ற தமிழினம் உணவை உண்பதிலும் அதன் பகுதியில் பலவற்றைப் பிரித்துச் சமைத்து உண்பதிலும் எல்லோருக்கும் முன்னோடியாக விளங்குகிறது என்பதை இலக்கியச் சான்றுகள் வழி உணர முடிகிறது. உயிர் வகைகள் முழுவதற்கும் இயற்கையால் வழங்கப்பட்ட உணவையும் உணவுப் பொருள்களையும் தமக்குத்தான் சொந்தமென்று சுருட்டி வைத்துக் கொள்வது எவ்வளவு கொடுமையான வஞ்சகச் செயல் என்பதை,

**இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய**
**தாமே தமியர் உணல் (குறள். 229)**

என்ற குறள் மூலம் அறியலாம்.

### முதன்மை உணவு

கோடிக்கணக்கான மக்களின் உயிரைப் பாதுகாத்து வாழ்க்கையை வளப்படுத்துகின்ற நெல் சாதாரணப் புல்லின் வகையைச் சார்ந்தது. நெல்லில் நூற்றுக்கணக்கான வகைகள் இருக்கின்றன. சங்க காலத்தில் காணப்படும் செந்நெல் போன்ற வகைகள் இன்றும் உள்ளன. சாலி, வேலி, சம்பா முதலிய பெயர்களும் நெல்லை உணர்த்தும் சொற்களே. சம்பா என்பது தற்போது குறிப்பிட்ட ஒருவகை நெல்லை உணர்த்துகிறது. ஆனால், முன்காலத்தில் அது நெல்லின் பொதுப்பெயராகவும் வயலின் பெயராகவும் இருந்தது. காலத்தின் வளர்ச்சிக்கேற்ப நெல்லின் வகைகளும் விரிந்துள்ளன. எனவே "நிலத்திற்கு அணி என்ப நெல்லும் புல்லும்" என்னும் வரி நெல்லிற்கு எவ்வளவு மதிப்புக் கொடுத்திருந்தனர் என்பதை விளக்குகிறது.

### துணைமை உணவுப்பொருட்கள்

துணை உணவுப் பொருட்களாய் வழக்கத்திலுள்ள பல்வேறு காய்கறிகள் இன்றும் வழக்கத்தில் உள்ளன. மா, பலா, களா, விளா, கடுகு, மிளகு, கரும்பு, வேம்பு, உழுந்து, தெங்கு, பனை, வாழை, அவரை, துவரை என எல்லா வகை துணை உணவுப் பொருட்களும் கீரை வகைகளும் உள்ளன. புலாலை எடுத்துக்கொள்ளாத சைவ உணவும் சைவ மக்களும் தமிழகத்தில் இருந்தனர். பழங்காலத்தில் மலை வளமும், காட்டு வளமும், வயல் வளமும், கடல் வளமும் சிறந்து மக்களுக்குப் பல்வேறு பயன்களை அளித்து வந்தன. இன்றுபோல வளங்களை அழிக்காமல் உபயோகம் செய்தவர் அன்றையத் தமிழர். ஆற்றுநீர், கிணற்றுநீர், ஊற்றுநீர் எனப் பிரித்து நீரினை வகைப்படுத்தி அருந்தினர். இது மட்டுமன்றி வெளிநாடுகளில் இருந்து வருவிக்கப்பட்டு, இன்று வழக்கில் இருக்கும் ஒரு சில உணவுப் பொருட்களைத் தவிர, பண்டைத் தமிழர் பயன்படுத்திய அத்துணை உணவுப் பொருட்களும் இன்றைய மக்களாலும் பயன்படுத்தப்படுகிறது.

### வெறியாட்டு

தமிழர் வழிபாட்டில் வெறியாட்டும் ஒன்று. இதனை முருக வழிபாட்டு என்றும் கூறுவர். வெறியாட்டு நடக்கும் இடம்தோறும் செந்நெல்லின் பொரி சிதறிக் கிடக்கும் என்பதனை,

**வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்**
**செந்நெல் வான்பொரி சிதறி யன்ன**
**(குறுந்.52:3-4)**

என்னும் குறுந்தொகை அடிகள் சுட்டுகின்றது. மேலும், பலநிறம் பொருந்திய சோற்றுடன் ஆட்டுக் குட்டியைக் கொன்று, நோய் வந்த பெண்ணின் நெற்றியைத் தடவி வேலனை வணங்கிப் பலி கொடுக்கப்பட்டதை,

**பல்வேறு ருவிற் சில்லவிழ் மடையொடு**
**சிறுமறி கொன்றிவ ளறுதுத னீவி**
**வணங்கினை கொடுத்தி யாயின்**
**(குறுந்.362:3-5)**

எனும் குறுந்தொகை அடிகள் விளக்குகின்றன.

### கொற்றவை வழிபாடு

தமிழரது வெற்றி தெய்வம் கொற்றவை ஆகும். இவள் முருகனது தாய் எனக் குறிக்கப்படுகிறாள். இதனை,

**வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ**
**(திருமுருகு.258)**

என்று திருமுருகாற்றுப்படையும், உயர்ந்த பலியைக் கொற்றவை பெற்றாள் என்பதை,

**உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்**
**(அகம்.166:7)**

என்று அகநானூறு விளக்குகிறது.

### காக்கை படையல்

தலைவன் வரவை முன்னரே கரைந்து அறிவித்து, தலைவியை ஆற்றுவித்த பெருமை காக்கைக்கு உரியது. எனவே, தோழியின் துன்பம் நீங்குமாறு கரைந்த காக்கைக்கு உரிய பலியாக, இடையர்களின் பல பசுக்கள் பயந்த பாலில் எடுத்த நெய்யில், தொண்டி என்னும் ஊரிலுள்ள வயல் முழுதும் ஒருங்கே விளைந்த வெண்ணெல் அரிசியிட்டு சமைத்த வெள்ளிய சோற்றினை ஏழு கலத்தில் ஏந்திக் கொடுத்தாலும் சிறிதாகும் எனத் தோழி தலைவனைப் பற்றி,

***திண்தேர் நள்ளி கானத் தண்டர்***
***பல்லா பயந்த நெய்யிற் றொண்டி***
***முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெண்சோறு***
***எழுகலத் தேந்தினும் சிறிதென் தோழி***
***பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு***
***விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே***
***(குறுந்.133)***

என்ற குறுந்தொகைப் பாடல் வழி அறியலாம்.

## நடுகல் வழிபாடு

போரில் மாண்ட வீரனது பெயரையும் புகழையும் கல்லில் எழுதி, நடுகல் நாட்டி, அதில் மயில் இறகுகளைச் சூட்டி துடிப்பறையை அடித்தனர். பின்னர், தோப்புக் கள்ளொடு செம்மறி ஆட்டையும் பலியாகக் கொடுத்தனர் என்பதை,

***வில்ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்***
***வல்லான் பதுக்கைக் கடவுட் பேண்மார்***
***நடுகற் பீலிசூட்டித் துடிப்படுத்துத்***
***தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்***
***(அகம்.35)***

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள் சான்று பகர்கின்றது.

அந்தணர்களும் ஊன்உண்ட பழந்தமிழ் சமுதாயத்தில் மரம், செடி, கொடி ஆகியவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய இலை, பூ, காய், கனி, விதை, கிழங்கு ஆகியவற்றை மட்டுமே உண்ணும் சைவ உணவினரும் காணப்பட்டனர் என்பதைப் பெரும்பாணாற்றுப்படை சில இடங்களில் எடுத்துக்காட்டுகிறது. (பெரும்பாண்.306:10)

புலால் உணவு உண்ணாத வேளாளர்கள் நல்ல பசுக்களையும் எருதுகளையும் பாதுகாத்து, விருந்தினர்க்கு பணியாரங்கள் பல அளித்து குறைவுபடாத வாழ்க்கையை வாழ்ந்தனர் என்பதை,

***பண்ணியம் அட்டியும் பசும்பதங் கொடுத்தும்***
***புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்***
***கொடுமேழி நசையுழவர் (பட்டினப்.200)***

என்ற பட்டினப்பாலை வரிகள் விளக்குகின்றது.

ஆனால், ஊன் உண்ணும் அந்தணர் வழக்கம் பிற்கால அந்தணரிடையே காணப்படவில்லை. புலால் உண்ணாத சைவக் குடும்பங்கள் இன்றும் தமிழகத்தில் இருப்பது, பழந்தமிழர் பண்பாட்டை அப்படியே பின்பற்றி வருகின்ற ஒரு பிரிவினர் இன்றும் இருக்கின்றனர் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

இறை வழிபாட்டின் போதும் பலியிடும்போதும் பழந்தமிழர் தாம் பயன்படுத்திய உணவுப் பொருட்களையும் பிறவற்றையும் கடவுளர்களுக்கு அளித்தனர் என்பதையும் இயற்கையாக விளைந்த உணவை பகிர்ந்துண்டு, நோய் நொடியின்றி வாழ்ந்ததையும் சங்க இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது.

## துணைநின்ற நூல்கள்

1. சிதம்பரனார். சாமி., எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், அறிவுப் பதிப்பகம், சென்னை. 2003.
2. சுரதாம்பாள். செ., செவ்வியல், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை. 1988.
3. சே.நமசிவாயம், தமிழர் உணவு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை.